

எழுத்துக்களம்
வெளியீட்டகம்
வித்தாகும்
விழுதுகள்
கவிவளவன்

# வித்தாகும் விழுதுகள்!

கவிஞர் **கவிவளவன்**

**எழுத்துக்களம்**

வெளியீட்டகம்,

**செம்பாக்கம், சென்னை - 73**

# இறைமை!

இறைமை என்பது இயன்நிலை யாகும்!
தோண்டத்துலங்கும் அறிவே அதன் நிலை!
மனதுள் நிலவும் மாயவலைகளை,
அறுத்துப் போட  அறிவைக் கூட்டும்!

காலம் விழுமிய மாய  நிலைகள்;
இயன்நிலை அறியா இன்னல் செய்யும்!
பார்த்ததும்;  படித்ததும்; பண்பெனச் சுவைத்ததும்,
ஆளும் உடலின் ஆனந்தத் தேடல்கள்!



அசைவைக்  காணா அசைவில் நிறைந்து;
ஆன்ற அறிவில் தோன்றத் துலங்கி,
தோற்றமும் முடிவும் பொய்யெனப் புகன்று;
மாற்றம் என்பதை மாட்சியாய் அறிந்து,

ஆடும் மனதுள் ஆளும் உயிர்நிலை,
இறைமை என்றே இனியதாய் உணர்ந்தால்,
யாவும்  வசப்ப்படும், எளிமையாய்த் தோன்றும்!
இறைமை என்பது, தனிவழி அல்ல,

**இயன் நிலை என்றே எளிதில் புரியும்!**
யாவும் அன்பே!,  யாவும் அறிவே!!  யாவும் இறையே!!!

**(22-02-2017)**

# உன்னில் உன்னைத் தேடு!

நின்று நிகழ்த்திய, ஆவிதான் போயினபின்,
நெடுஞ்சரமாய் மண்ணில் வீழ்ந்து;
உற்றாரும், உறவுடைய மற்றோரும்,
வழிநடத்திக் காட்டில் வைத்து,
நெருப்பிட்டோ, நீள்குழியில் வைத்து,
மண் இட்டோ மூடியப் பின்,
இருபுறமும் பாராமல், அழுதபிள்ளை;
இல்லம் வர, இருப்போரும், மற்றோரும்,
சிலநாள் கதை பேசி, சென்றவனின்,
மகிமை மண்ணில் எத்துனைநாள் வரை..?

பெருஞ்சொத்துச் சேர்த்திருந்தால்,
குலப் பெருமைச் சுற்றம் பேசும்!
அரசியலில் வாழ்ந்த்திருந்தால்,
அடுத்தத் தலைமை யென்றே,
வாக்குக்காய் உறவைக் கூட்டும்!

-வேறு-

மடிகின்ற உடலுக்கு நீயே நெருப்பைக் கட்டு,
ஆசைகளை அழித்துவிட்டு மனத்தை ஆளு!
நின்றாளும் மனதுள்ளே ஒளியைத் தேடு!
அழிகின்ற உடலுக்காய் சுவைகள் எதற்கு?
ஆசைகளை அறுத்துப் போட்டு, அமைதியைத் தேடு!

(02-12-2006)

# அழகு!

அல்லும் பகலுமாய் அழகியல் என்பதே வாழ்வின் நிலையாம்!
சொல்லும் பகையும் சுடர்விடும் அறிவும், அல்லல் படுத்தும்!
கல்லும் கரையும் கனிந்த மனத்துள் முகிழ்ந்திடும் அன்பில்!
நெல்லும் பயிருமாய் நிறைந்த வயலில், வீசும்நல் சுகந்தம்!

மல்லை நகரில் மகேந்திரன் செய்தக் குடவறை அழகு!
முல்லைக் கொடியின் மனத்தைச் சூடிய பாரியின் அழகு!
எல்லையில்லா கற்பனைச் சுமக்கும்;  கவிதையின் அழகு!
தொல்லை என்னுமோர் சூழல் யாவுமே; தெளிவில்லா மனமாம்!

--- வேறு ---

தெளியா மனத்துள் தேடல் வையுங்கள்!
ஒலியாய் சுடராய், அறிவின் கேள்வன்;
தெளியா மனத்தின் திறவுகோல் காட்ட,
ஒளியாம் அறிவின் உண்மையை நாட்டுங்கள்!

--- வெறு ---

நல்லன வேண்டும்! நல்லன வேண்டும்!!
நானிலம் போற்றும் நல்லன வேண்டும்!
அல்லன நீக்க அல்லன நீக்க,
ஆன்றநல் அறிவால் அனைத்தும் விலக்கு!




அல்லல் வேண்டாம்; ஆத்திரம் வேண்டாம்!
தொல்லைகள் நீங்க, தோல்வியைத் துரத்து!
எல்லையில் அழகுடன் இயைந்துப் பழகு!
வல்லவன் யாரோ? வகுத்தவன் யாரோ!!

துள்ளுமோர் அழகில் சுடர்விடும் மனமே!
அள்ளக் குறையாத ஆனந்த நிலையோ!
கள்ளின் சுவையோ காமம் பெரிதோ!
பிள்ளைக் கனியமுதின் பிதற்றலும் அழகு!

துள்ளும் ஆவின் கன்றும் அழகு!
முள்ளைச் சுமந்த மலரும் அழகு!
பிள்ளைச் சுமந்த பெண்மையும் அழகு!
கொள்ளும் அழகில் குவலயம் போற்றுவோம்!

==#==

**(நன்றி, திருச்சி சுங்கத்துறை அலுவலக மலர்)**



# இந்து என்பவர் யாரவரோ!



இந்து என்பவன் யார் என்றே,
இதயம் கனக்க நடைநடந்தேன்!
கண்ணில் கண்ட மனிதரைத்தான்,
காட்சியாய் மனதில் தடம் பதித்தேன்!



நீரைக் குழைத்து  உடலேங்கும்;
நிறைவாய்ப் பூசி நடந்தவனை,
யாரெனக் கேட்க, அவன் சொன்னான்;
'சைவம்' எனது சமயம் என்றான்,
சிவனே உலகின் கடவுளென்றான்!



நாமம் தரித்த நன்மகனை;
நானும் கண்டுக் கேட்டேனே!
அவனும் அழகாய்த்தான் சொன்னான்;
'வைணவம்' எனது மதமென்றான்;
விஷ்ணுவே தனது தெய்வமென்றான்!



சந்தனம் குழைத்து நாமமிட்டோன்,
சந்தித்த வேளையில் தான் சொன்னான்,
கிருஷ்ணரே எங்கள் தெய்வமென்றான்!
அடுத்து ஒருவனும் தான் சொன்னான்;
இராமனே எங்கள் தெய்வமாகும்,
'மாத்துவம்' எங்கள் மார்க்க மென்றான்!



நாமத்தில் மறுவகை நோக்குகையில்,
இருகலை இங்கே உண்டென்றான்;
வடக்குத் தெற்காய் வகைப் படுத்தும்!




ஆதியாய்ச் சைவ மடங்களுண்டு,
மரக்கறி யுண்போர் மாண்புகளால்;
'சைவ'மென் பதாய்ப் பெயர் பெறவே,
அடுத்தும் சிலவே சேர்ந்தனவே!



'அத்வைதச்' சங்கர மடமுண்டு,
ஆயினும் அவற்றைச் சைவ மென்பார்!
சைவத்தில் ஆகமம் தனியுண்டு;
தமிழர் கண்டநெறியதுவாம்!
வைணவ வகையில் பலவுண்டு,
வகுத்தோர் முறையாய் ஆனதுவே!



கொற்றவை வணங்கும் சீர் வங்காளம்;
எங்கும் நிறையும் விநாயகரை,
மராத்திய தேசம் மனம் கொள்ளும்!




முருகனே இங்கு முதற் கடவுள்,
தமிழனே யென்றுத் தரணி சொல்லும்!
வள்ளியை மணந்த மலையகத்தோன்.
மருவிலா மாலனின் மருமகனாம்!
இப்படிப் பலவாய்க் கதைகளுண்டு;



ஆதியில் வந்த இசுலாமியன்;
அழகில் மயங்கிப் பெயரிட்டான்!
‘இந்துஸ்தானம்’ என்பதாக!
அடுத்து வந்த ஆங்கிலேயனும்,
அதையே முறையாய் நெறிப்படுத்தி,
‘இந்தியா’ என்றேப் பெயருமிட்டான்!



மதங்களை அவனோ எண்ணுங்கால்,
இசுலாயியர், கிறிஸ்தவர் அல்லாதார்,
‘இந்து’ எனவாய்ப் பெயருமிட்டான்!
சீக்கியர் இன்னும் தவிக்கின்றார்,
தனித்தோர் அடையாளம் தரவேண்டி!



இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை,
ஆவணங்கள் தானே அலங்கரிக்கும்,
சிவமதம், விஷ்ணுமதம் என்பதாக!
ஆதலால் எழுந்ததோர் ஐயம்தான்,
இந்து என்பவர் யார் என்றே!
இன்னும் எனக்குப் புரியவில்லை!



பவுத்தரும் சமணரும் இங்கே யுண்டு,
தனியே அவரையும் நினைப்பதில்லை!
மரக்கறி மாண்புகள் சமணமெனில்,
மறுப்பதற்கு இங்கேத் தமிழருண்டு!



shutterstock.com • 769362109



அறிந்தார் கொஞ்சம் விளக்கிடுங்கள்;
அரசியல் அதனால் வளர்கிறதே!
தீண்டாமை என்னும் தீப்பிழம்பும்,
தீயாய் இன்னும் சுடுகிறதே!
அவருமே இந்துவாய் அவதரித்தால்,
அப்புறம் ஏனோ தீண்டாமை!

அறிந்தவர் கொஞ்சம் விளக்கிடுங்கள்;
இந்து என்பார் யார் என்றே?
அவர்தம் கடவுளும் எவரென்றே!
இந்தியா என்பதே இந்துவா?
இந்துத்வா என்பது தனிவழியோ!
அறிந்தவர் கொஞ்சம் கூறுங்கள்!!

**25-12-2017**



# கொசு!


உண்டேன், உறங்கினேன், உயிர்நிலை மயங்கிய;
கனவுகள் இல்லா அற்புத உறக்கம்!
இயற்கையில் உந்துதல், எழுந்தேன், முடித்தேன்;
மீண்டும் சாய்ந்திடக் கண்டிலேன் உறக்கம்!

கரங்களில், தோள்களில், கால்களில், எரிச்சல்;
அறுபது இரவுகள் சேவைச் செய்யும்,
தைலமும் கரைய, கொசுக்களின் ஆட்டம்!
வத்தியும் கொளுத்தி வைத்துப் பார்த்தேன்,
உறக்கமும் போச்சு, எரிச்சலும் ஆச்சு!



இறைவா! நினதுப் படைப்பின் அமைப்பில்,
இரவில் உறக்கமாய் எழுதி வைத்தாய்!
கொசுக்களையும் படைத்து ஏனிந்தக் கூத்து?
உன்னையும் மீறிய உன் படைப்போ!
உண்மையில் உலகினை ஆள்வது யாரோ?!

**17-08-2005.**



# வாழ்வியல்!

நிலையா வாழ்வு நிலையும் என்றெண்ணி,
கலையாம் மனத்துள் களைகள் வளர்த்தே,
விலையில்லா வாழ்வின் விடை யறியாமல்,
களம்பலக் காணும் கற்பனைக் கெல்லாம்,

தளமென நினைந்து; உடலை வருத்தி,
வளமென்ற வாழ்வும் வணங்காதிருக்க,
கிழமெனும் முதுமைக் கிடைப்பதன் முன்னால்,
விழுமிய நட்பின் விடை தெரியாமல்,

விழுவதும் எழுவதும் வீரமென்றெண்ணி,
நழுவிபோகும் நாட்களை எண்ணார்!
அழுகும் பொருளை அழகென்றெண்ணி,
அழியா மனத்தின் அருமை காணாமல்,

பொருளே வாழ்வின் புதுமை எனவாய்,
பொருளைக் குவிக்கும் புதுவழி கண்டு,
அருமை உடலின் அழிநிலை அறியாது,
அடுத்து நாட்களை நகர்த்திக் கொள்வார்!

நிலையா மனமோ தன்நிலைத் தடுமாறும்,
விலையாய் உடலை வீழ்த்திக் காட்டும்!
களம்பலக் கண்டுக் குவித்தச் செல்வம்,
கட்டாய்ச் சுதைக்குள் காக்க வருமோ?

விட்ட உயிரை விரும்பி அழைக்கக்,
கட்டியச் செல்வம் கதைக்கு ஆகுமோ!
பாடும் மனத்துள் ஒலியைக் கேளுங்கள்!
ஆடும் மனத்துள் அசைவைக் காணுங்கள்!

கூடும் துயருக்குக் கொள்ளி வையுங்கள்!
நாடும் மனத்தை நலமாய் வாழ்த்துங்கள்!
வாழ்வின் பொருளை வணங்கித் தேடுங்கள்!
வானத்துப் பூக்கள் சரமாய்ச் சொரியும்!

அக்னி எழுந்து உடலை நிறுத்தும்!
பொருட்கள் யாவும் பொலிவாய்த் தோன்றும்!
வாழ்வியல் தத்துவம் வளமுடன் அறிய,
உடலும் பிணியும் உறவின்றிப் போகும்!

அழியும் உலகியல் அறிந்த மனத்துள்,
பொழியும் சுடராம் புதுமை அறிவு;
பொங்கக் காண்பீர் புறப்படுவீரே!
நிலையா வாழ்வை நிலையென் றெண்ணாதீர்!

30.12.2000





இந்நூலாசிரியர் இன்றையத் திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண் அரசில்; இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணிநிறைவுக் கொண்டவர். அடிப்படையில், கணித மாணவர், முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினி பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில், முதுகலைப் பட்டத்தோடு, இளநிலை சட்டவியலும் பயின்று தேர்ச்சிப் பெற்றுள்ளார். இவர், கல்வியில் கரையில என்பதாக விளங்குகிறார்.

எழுத்தும் எனக்கொரு பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இதுவும் இவருக்கு ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்ற லோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு,கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, "கனவின் ஓசைகள்" எனும் பெயரில் ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர் .

யாதவக் கண்ணன் போலே,
 யான்கண்ட தெய்வம் இல்லை!
மாதவன் போல்வான் ஈசன்,
 மரியவள் குழந்தை ஏசு;
சோதரர்ச் சொல்லும் அல்லா;
 சொல்லத்தான் வேறு அன்றி,
யாதுமே ஒன்றாம் அந்த,
 ஈசனின் வடிவம் தானே!

**- கவிவளவன் (1990)**


**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவிண்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை -73**
**அலைபேசி: 9940061280**
www.ezhuththukkalam.co.in
www.epublish.co.in